**ஊக்குபதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனம் - 2018**

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊக்குபதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து முகவராண்மை நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முகவராண்மையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

முகவராண்மையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் முகவராண்மையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

--------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின்

தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 9 இன் 47(அ) பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,110,839 ஆன இருப்புக்களை மதிப்பீடு செய்வது தொடர்பாக பயன்படுத்திய கிரய சூத்திரம் உட்பட இருப்பு மதிப்பீடு செய்யும் போது பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இருப்பு மதிப்பீடு நிறையளிக்கப்பட்ட பெறுமதி அடிப்படையில் (Weight average) மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக்கணக்கீட்டுக்குரிய நடைமுறை கணக்கீட்டு கொள்கைகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகின்றேன். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் மானியமாக குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 349,924 தொகை மீளாய்வாண்டின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 132 பிரிவின் பிரகாரம் அத்தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டி ருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டிலிருந்து பயிற்சி நிகழ்ச்சித்திட்ட மொன்றிற்காக கிடைத்த தொகையில் மிகுதி கணக்கு கூற்றில் நிதிய தலைப்பின் கீழ் இருந்ததுடன் அதனை பதிவழித்தல் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டிருந்தது. அது கணக்கீட்டு கொள்கைகளில் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் அதனை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகின்றேன். | நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிக்கும் போது பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (iii) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 86(ஆ) பிரிவின் பிரகாரம் சொத்துக்களுக்காக பயன்படுத்தும் பெறுமானத்தேய்வு முறைமை வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும் முகவராண்மையால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 179,928 தொகையான ஆராய்ச்சி உபகரணங்களுக்காக ரூபா 44,982 பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் அப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி உபகரணங்கள் 25 சதவீதப்படி கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டு, ஆண்டு முதல் பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதனைக் கணக்கீட்டு கொள்கைகளுக்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகின்றேன். | நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிக்கும் போது பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

---

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களின் ஈடுபடும் போது ஊக்க மருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் 33 ஆம் பிரிவு | ஊக்குப்பதார்த்தங்களை பெற்றுக்கொள்வதற்கு எதிராக விதிகளை தயாரித்து அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு அமுலாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை முகவராண்மை தரித்து 5 ஆண்டுகள் | தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்த சட்ட விதிக்கோவை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதுடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உரிய அவதானிப்புக்கள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் சட்டவிதிகளை தயாரித்து கொள்ளலாம். சட்டவிதி கோவைகளுக்கு | நிறுவகத்திடமிருந்து எதிர்பார்க்கப்படும் பிரதான செயற்பாடான ஊக்கப்பதார்த்தினை பயன்படுத்துவதற்கு எதிராக செயற்படுவதற்காக செயற்படுத்துவதற்குரிய சட்டங்களை தயாரித்து வர்த்தமானியில் வெளியிடப்பட்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடந்திருந்த போதிலும் நிறுவகத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் பிரதான செயற்பாடான ஊக்கப்பதார்த்தினை பயன்படுத்துவதற்கு எதிராக செயற்படுவதற்காக விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்டு அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முடியுமாக இருக்கும் | அமுலாக்கப்பட வேண்டும். |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் திறைசேரி செயலாளரின் 2001 சனவரி 25 ஆந் திகதிய IAI/2001/1 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | உள்ளக கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வெர்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலமோ அல்லது உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்காள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து கோரப்பட்ட போதும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை. தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தரொருவருக்கு உள்ளக கணக்காய்வு தொடர்பான பயிற்சியொன்று வழங்கப்பட்டுள்ளது. அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவில் போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. | உள்ளக கணக்காய்வாளரை ஆட்சேர்ப்பதற்கு அல்லது விளையாட்டு அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 772 | மீளாய்வாண்டில் பொருள் மெய்மையாய்வு மூலம் இனங்காணப்பட்டிருந்த பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத பொருட்களை உரிய வகையில் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு கையகற்றும் பதிவேடு அமைச்சிற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. அமைச்சு மட்டத்தில் கையகற்றும் பதிவேடு கருத்திற் கொள்ளப்பட்டதன் பின்னர் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மூலம் இனங்காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் தொடர்பாக செயற்படுத்தப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 429,424 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை 29,800 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 399,624 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு திறைசேரி மானியங்கள் ரூபா 24,971,170 அதிகரித்திருந்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 2,108,632 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் முகவராண்மையின் நடைமுறை சொத்து விகிதம் 1.39 முதல் 0.24 வரை குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் முகவராண்மையில் குறுங்கால பொறுப்பு தீர்ப்பனவு இயலுமை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஆட்களுக்கு தடை செய்யப்பட்ட ஊக்கு பதார்த்த பரிசோதனை | | |
| | மீளாய்வாண்டின் போது முகவராண்மையால் ஆட்களுக்கான தடை செய்யப்பட்ட ஊக்கு பதார்த்தம் தொடர்பாக 276 பரிசோதனைகளும் முன்னைய ஆண்டின் போது 134 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பரிசோதனைகள் 142 ஆல் அதிகரித்திருந்தன. மீளாய்வாண்டில் தடை செய்யப்பட்ட ஊக்கு பதார்த்தம் பயன்படுத்திய 06 சந்தர்ப்பங்களும் முன்னைய ஆண்டின் போது 05 உம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் 62 விளையாட்டுச் சங்கங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது 17 தேசிய விளையாட்டுக்களுக்கு உரியதாகவும் 2017 ஆம் ஆண்டின் போது 09 தேசிய விளையாட்டுக்களுக்குரிய உரிதாகவும் மாத்திரம் இப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்காக 276 தடை செய்யப்பட்ட ஊக்குப் பதார்த்த பரிசோதனைகள் நடாத்த திட்டமிட்டிருந்தன. விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட 62 விளையாட்டு சங்கங்கள் காணப்பட்ட போதிலும் 2017 ஆல் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இடர் மதிப்பீட்டின் மூலம் தெரிவு செய்யப்பட்ட தடை செய்யப்பட்ட ஊக்குப் பதார்த்த பரிசோதனை 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டதுடன் இதற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளக்கூடிய பரிசோதனைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டன. அனைத்து போட்டிகளிலும் ஊக்குப் பதார்த்த பரிசோதனை மேற்கொள்ள முடியாததுடன் இடர் மதிப்பீட்டின் பிரகாரம் தடை செய்யப்பட்ட ஊக்குப் பதார்த்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன | அதிகளவு போட்டி களையும் சகல விளையாட்டுக்களை யும் மேவுகை செய்யக்கூடிய வகையில் தெரிவு செய்யப்பட்டு தடை செய்யப்பட்ட ஊக்குப்பதார்த்த பரிசோதனை தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |

(ii) மிருகங்களுக்கான தடை செய்யப்பட்ட ஊக்குப் பதார்த்த பரிசோதனை

------------------------------------------

மீளாய்வாண்டின் போது மிருகங்களுக்கு தடை செய்யப்பட்ட ஊக்குப் பதார்த்த 09 பரிசோதனைகளும் முன்னைய ஆண்டின் போது 07 மேற்கொள்ளப்பட்டதுடன் இரண்டு ஆண்டிலும் மிருகங்களுக்கு ஊக்குப் பதார்த்தம் வழங்குதல் எதுவும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஊக்குப் பதார்த்த பரிசோதனைக்காக வருடாந்தம் ரூபா 13 மில்லியன் அளவில் செலவிடப்படுவதால் அத்தியாவசியமாக கருத்திற்கொள்ளும் விளையாட்டுக்களின் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. இதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டினை விட கூடிய விளையாட்டுக்களை மேவுகை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அறியத்தருக்கின்றேன்.

அதிகளவான போட்டிகளை மேவுகை செய்யும் வகையில் மிருக தடை செய்யப்பட்ட ஊக்குப் பதார்த்த பரிசோதனை தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

(iii) **மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல்**

---------------------------------------------------

பாடசாலை மாணவர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், பௌதீக உடற் பயிற்சி பயிற்சியாளர்கள் மற்றும் பெற்றோர்கள், விளையாட்டு பயிற்சியாளர்கள், விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் பெற்றோர்கள், விளையாட்டுடன் அண்மித்த தரப்பினர் ஆகியோருக்காக வீர வீராங்களைகளின் பொறுப்பு மற்றும் கடமைகள் தடை செய்யப்பட்ட ஊக்குப் பதார்த்த பாவனையின் பாதகமான விளைவு, போதைப்பொருட்களை கட்டுப்படுத்தும் செயற்பாடு, தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறைகள், தவிர்க்ககூடிய முறைகள், உலகலாவிய போதைப் பொருள் எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அடிப்படை விழிப்புனர்வு போன்ற விடயங்கள் தொடர்பில் கவனத்தை செலுத்தி 72 மாநாடுகள் மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் மீளாய்வாண்டில்

2018 ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் தடை செய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தம் தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வுகளை நடாத்துவதற்கு 2018 ஆம் ஆண்டில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் விளையாட்டு வீர வீராங்கனைகளை பிரதான இலக்காக கொள்ளப்பட்டனர் எனினும், ஆசிய விளையாட்டு போட்டி போட்டியில் விளையாட்டு வீராங்கணைகளின் எண்ணிக்கை சிறிய அளவாக இருந்ததால் சமூகமளித்தவர்களின் அளவு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக குறைவான அளவொன்றாக இருந்தது.

விளையாட்டு வீர வீராங்கனைகள் மேவுகை செய்யப்படும் வகையில் தடை செய்யப்பட்ட ஊக்குப் பதார்த்தம் தொடர்பாக அதிக மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவது தொடர்பில் முகாமைத்துவத்தின் விஷேட கவனம் செலுத்த வேண்டியதுடன் செயலமர்வுகளை நடாத்தும் போது வருகை தராத விளையாட்டு வீர வீராங்கணைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நடாத்தப்பட்டதுடன் அதற்காக 2,268 பேர் தொடர்பு படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு ஒத்தாக, முன்னைய அண்டில் 51 நிகழ்ச்சிக்காக 3,581 பேர் பங்கு பற்றியிருந்தனர். முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் நிகழ்ச்சிகளை நடாத்தும் அளவு 21 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதும் அதன் பங்குபற்றியோரின் எண்ணிக்கை 1,313 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3.2 தாமதமான செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகள்

முகவராண்மையின் புதிய கட்டிட நிர்மாணம் அதன் உள்ளக திட்டம் மற்றும் தளபாடங்கள் உபகரணங்கள் கொள்வனவிற்காக ரூபா 230.83 மில்லயனான கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இச் செயற்திட்டத்திற்காக ரூபா 189.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்திட்டம் மீளாய்வாண்டில் நடுப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் அது மீளாய்வாண்டின் இறுதி பகுதியிலேயே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஆரம்ப மதிப்பீடு தயாரிக்கும் போது இணங்காணக்கூடியதாக இருந்த கட்டிடத்தின் உட்கூரை அமைப்பு, மின்பிறப்பாக்கி இயந்திரம், மற்றும் காற்று சீராக்கி முறைமை வழங்கல் மற்றும் பொருத்துதல் மின்சாரத்தை பெற்றுக்கொள்ளும் வேலைகள், கட்டிடத்தின் அறைகளை ஒதுக்கீடு செய்தல், நீர் வழங்கல் வேலைகள் என்பவற்றை ஆரம்ப மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்படாததன் காரணமாக கட்டிடங்களுக்காக அத்தியாவசியமான 19 விடயங்களுக்காக மேலதிக மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு இதன் வேலைகளை முதலாவது ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆரம்ப ஒப்பந்தத்தை வழங்கும் போது சகல விடயங்களும் உள்ளடக்கப்பட்டு கேள்வி கோராமை காரணமாக மிகவும் சாதகமான போட்டி விலைக்கு ஒப்பந்தம் வழங்கும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | நிர்மாணம் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் 13 விலகல் மற்றும் 06 மேலதிக வேலைகள் இனங் காணப்பட்டது. அதன் பிரகாரம் மேலதிக வேலைகளாக 06 உருப்படிகள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதன் கிரயம் ரூபா 48.8 மில்லியனாக இருந்தது. நிர்மாண வேலையில் கருத்தில் கொள்ள வேண்டிய அளவொன்று பூர்த்தி செய்யப்பட்டு காணப்படுவதால் துரிதமாக நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்காக அந் நடவடிக்கைகள் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.4 இன் கீழ் ஒப்பந்தக்காரருக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் சகல நிர்மாண வேலைகளையும் மேவுகை செய்யக் கூடிய வகையில் விரிவான கிரய பகுப்பாய்வொன்று உள்ளடக்கப்படும் வகையில் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான திட்டமொன்றின் பிரகாரம் பெறுகை செயற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மின் இணைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு தாமதம் மற்றும் மல மற்றும் கழிவு நீர் இணைப்பு பெற்றுக்கொள்வதற்கு தாமதமாகியமை இச் செயற்திட்டம் உரிய வேலையில் பூர்த்தி செய்ய முடியாமையாக்கான காரணமாக இருந்தது. | எமது நிறுவனத்திற்கு மின் இணைப்பிணை வழங்கும் 95 KV கேபல் இதுவரை மின்சார சபையில் இல்லாமல் இருந்ததுடன் அதற்குரிய பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மின்சார சபை தெரிவித்திருந்தது. ஆதலால் தற்காலிகமாக மின் இணைப்பொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு மின்சாரம் பெறப்பட்டுள்ளது. அவ்வாறே, மல/கழிவு நீர் இணைப்புக்கள் பிரதான முறைமைக்கு தொடர்பு படுத்துவதற்குரிய நிர்மாண வேலைகள் நகரசபை மூலம் மேற்கொள்ள வேண்டியதுடன் அதற்குரிய பெறுகை செயற்பாடு நகர சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது ஆதலால் தற்காலிகமாக மல / கழிவு நீர் அகற்றும் முறைமை பொருத்தப்பட்டது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் விரிவான வேலை மற்றும் கிரய பகுப்பாய்வொன்று உள்ளடக்கப்படும் வகையில் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் முறையான திட்டமொன்றின் பிரகாரம் பெறுகை நடைமுறையில் செலுத்தப்படல் வேண்டும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக உள்ள பணிப்பாளர் பதவி, இரண்டு உதவிப் பணிப்பாளர் பதவிகள் மற்றும் சாரதி பதவி என்பவற்றை தீர்ப்பதற்காக முகவராண்மையால் மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகைமைகளுடன் திருத்தம் செய்யப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத் திணைக்களத்தினால் தற்போது இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையை தற்போது ஆராயப்பட்டு இறுதி கட்டத்தில் காணப்படுகின்றது. அது அங்கீகரிக்கப்பட்ட உடனே உரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தாமதமின்றி செயற்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையில் 17 செலவின விடயங்களில் 10 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது வினைத்திறனானதொரு முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டது | 2018 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு நிதி ஏற்பாட்டை மாதாந்த தேவைப்பாடின் பிரகாரம் திறைசேரியிடமிருந்து கோரப்பட்ட போதிலும் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தால் போதியளவு நிதி ஏற்பாடு வழங்கல் இடம் பெறவில்லை ஆதலால் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் அபிவிருத்தி வேலைகளை மேற் கொள்வதற்கு முடியாதுள்ளது. 2019 ஆம் ஆண்டில் அவ்வாறான பலவீனங்களை இல்லாமலாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கிறேன். | பாதீட்டு மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட வேண்டியதுடன் விலகல் தொடர்பாக உரிய நேரத்தில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். |